விலை: சதம் 75

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஆவணி 24 துல்ஹஃ 9 இதழ் 207
யாழ்ப்பாணம் புதன்கிழமை 9 9-1981

டில்கா
வாச் வேக்ஸ்
Dilka Watch Works
யாழ் நகரில் சகல மணிக்கூடுகளையும் திருத்தவும் புதிதாக வாங்கவும் விஜயம் செய்யுங்கள்.
டில்கா வாச் வேக்ஸ்
பஸ் நிலைய எதிர் மேல் மாடி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி; 8174

முக்கிய அறிவித்தல்
1-8-1981 முதல் எமது ஆர். வி. ஜி. பீடி விற்பனையை ஸ்தாபனமே நேரடியாக நடாத்துகிறது என்பதை ஆர். வி. ஜி. பீடி விற்பனையாளருக்கும் பாவனையாளருக்கும் அன்புடன அறியத் தருகிறோம்.
மேலும் சிலரால் ஆர்.வி.ஜி. போலி பீடிகள் விற்பனை செய்யப்படுகின்றன. போலி பீடிகளை வாங்கி ஏமாறுமல் அசல் ஆர். வி ஜி பீடிகளை எமது விற்பனை வான் மூலமும், சைக்கிள் மூலமும் பெற்றுக்கொள்ளுங்கள்.
ஆர் வி. ஜி. பீடி நிர்வாகம்
47, பீச் ரோட், யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 230. [0880]

# கிராமோதய சபைகளின் முதல்கூட்டம் அக்டோபர் 15-ல்

## நடவடிக்கை எடுக்குமாறு செயலாளர்களுக்கு 'பணிப்பு

(கொழும்பு)

மாவட்ட அபிவிருத்திசபைகளின் நிர்வாக அமைப்பின் கீழ் அமைக்கப் பட இருக்கும் கிராமோதய சபைகளின் முதலாவதுகூட்டம் எதிர் வரும் அக்டோபர்மாதம் 15ம் திகதி நடைபெறும்என்று பிரதமர் திரு. ஆர் பிரேமதாசா நேற்று அரசாங்க பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிலும் ஒவ்வொரு கிராமோதயசபைகளை அமைத்து அவற்றின் முதலாவது கூட்டத்தை எதிர்வரும் அக்டோபர் மாதம் 15ம் திகதி நடத்துவதற்குவேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு 24 மாவட்டங்களிலுமுள்ள மாவட்ட செயலாளர்களை தாம் கேட்டுள்ளதாகவும் பிரதமர் திரு பிரேமதாசா இக்கூட்டத்தில் தெரிவித்தார் சகல மக்களையும் தத்தமது பகுதி அபிவிருத்தி நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபடுத்தும் நோக்குடனேயே கிராமோதயசபைகள் நிறுவப் படுகிறது என்றும் பிரதமர் தெரிவித்தார். ம இ

## நஷ்ட ஈடுபற்றி 'எஸ்.டி.' எழுப்பிய கேள்வி

(கொழும்பு)

"1977ம் ஆண்டு நிகழ்ந்த வன்செயல்களால் பாதிக்கப் பட்டவர்களுக்கு அரசாங்கம் ஏன் இன்னும் நஷ்டஈடு வழங்கவில்லை?" என்று கம்பஹா எம். பி திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா நேற்று பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினுர்.

பாராளுமன்றம் நேற்றுப் பிற்பகல் சபாநாயகர் ஜனுப் பாக்கீர் மாக்கார் தலைமையில்

[6ம் பக்கம் பார்க்க]

## யாழ். மெயிலில் தீஏற்படுத்தியபீதி!

கொழும்பு

யாழ்-கொழும்பு மெயில் ரயில் வவனியா நிலையத்திற்கு அண்மையில் பெட்டி இணைப்புகளுக்கு இடையே ஏற்பட்ட தீ பிரயாணிகளிடையே பெரும் பீதியை ஏற்படுத்தியது

நேற்றுமுன்தினம் திங்கட்

[6-ம் பக்கம் பார்க்க]

## உயர்மட்ட பேச்சுக்களில் 'நடா' கலந்துகொள்வார்

[யாழ்ப்பாணம்]

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும், அரசாங்கத்துக்குமிடையில் இம்மாதம் 16-ம் திகதி நடைபெறவிருக்கும் உயர்மட்ட பேச்சுவார்த்தையில் யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு சு. நடராசாவும் கலந்துகொள்வார்.

இப்பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளவருமாறு திரு சு நடராசாவுக்கு கூட்டணித் தலைமைப்பீடம் அழைப்புவிடுத்துள்ளது.

மாவட்ட சபை அதிகாரங்கள், செயல்பாடுகள் குறித்தும், 16ம் திகதி நடைபெறவிருக்கும் உயர்மட்ட பேச்சுவார்த்தையின்போது ஆராயப்பட விருப்பதால் மாவட்ட சபைத் தலைவரும் கலந்துகொள்வது பலனுள்ளதாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

## நள்ளிரவில் கொள்ளை: ஒருவர் கைது!

[யாழ்ப்பாணம்]

ஊரெழு மேற்கில் உள்ள வீடொன்றில் நள்ளிரவு நேரம் 24,650 ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

ஊரெழு மேற்கு சங்க வீதியைச் சேர்ந்த இளையதம்பி கிருஷ்ணபிள்ளை என்பவரின் வீட்டின் கூரையைப் பிரித்து இறங்கிய திருடர்கள் 24,650 ரூபா பெறுமதியான நகைகள் ரொக்கம் உடுபிடவை ஆகியவற்றைக் கொள்ளை அடித்துச் சென்றுள்ளதாக பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாக விசாரணைகளை மேற்கொண்ட சுன்னாகம் பொலிஸ் நிலையப்பொறுப்பதி

[6-ம் பக்கம் பார்க்க]

## பின் ஆசனத்தில் புஞ்சிநிலமே

கொழும்பு

பிரதி அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட இரத்தினபுரி எம் பி திரு ஜி வி புஞ்சிநிலமே நேற்று பாராளுமன்றத்தில் தமது வழமையான ஆசனத்தில் இருக்கவில்லை

திரு புஞ்சிநிலமே அரச எம் பிக்கள் அமரும் பக்கத்தின் பின் ஆசனத்தில் அமர்ந்திருந்தார்

உ

திருமண அழைப்பு

நிகழும் துர்மதி ஸ்ரீ ஆவணி மீ 25-ம் நாள் [10-09-81] வியாழக்கிழமை முற்பகல் 8-27 முதல் 10-04 வரையுள்ள துலா லக்கின சுபமுகூர்த்தத்தில்

தாமோதரம்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புதல்வன் திருநிறைச் செல்வன் மகேஸ்வரன் [பங்காளர், றேடியோனிக்ஸ் யாழ்ப்பாணம்]

கனகசபாபதியின் சிரேஷ்டபுத்திரி திருநிறைச்செல்வி வாணி

திருமணம் கலட்டி அம்மன் கோவிலில் நடைபெறவிருப்பதால் தாங்கள் குடும்ப சமேதரராய் சமுகம்தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. திருமதி ச. தாமோதரம்பிள்ளை
45, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

திரு. இ. கனகசபாபதி [ஓய்வுபெற்ற கிராமசேவையாளர்]
21A, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்.

0887

## கத்திமுனையில் நடப்பதுபோன்றநிலையில் அரசுடன் பேச்சுநடத்தினேம்

### யாழ் நகரில் 'அமிர்'

யாழ்ப்பாணம்

"தமிழ்இனத்தின் எதிர்காலச் சந்ததியினருக்கு எதுவித தீமைகளும் ஏற்படக்கூடாது என்பதற்காகவும் உயிர்களைக் காப்பதற்காகவுமே நாம் அரசுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டோம்".

"கத்திமுனையில் நடப்பது போன்றே அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தினேம் தெய்வத்தின்மீது நாங்கள் வைத்துள்ள நம்பிக்கையினுல் எமது பேச்சுவார்த்தை நல்லமுறையில் முடிவடைந்தது

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணித் செயலாளர்நாயகமுமான திரு அ அமிர்தலிங்கம் யாழ்ப்பாணத்தில் நேற்று தெரிவித்தார்

மன்னார் மறை மாவட்டத்தின் முதலாவது ஆயராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிவண பிதா கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளுக்கு.

[6-ம் பக்கம் பார்க்க]

## முல்லை. மின் அபிவிருத்திக்கு ரூ. 26 லட்சம்!

[கொழும்பு]

முல்லைத்தீவு மாவட்ட மின்சார அபிவிருத்திகளுக்காக பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு செ இராசதுரை நேற்று 26 லட்சம் ரூபா காசோலையை முல்லைத்தீவு மாவட்ட அமைச்சர் ஜனுப் ஏ. ஆர். மன்சூரிடம் வழங்கினுர்.

முல்லைத்தீவு மின் அபிவிருத்திகளுக்காக ஏற்கனவே 15 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளதென்றும் மேலும் பதினெரு லட்சம் ரூபா வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று நடைபெற்ற காசோலை கையளிப்பு வைபவத்தில் முல்லைத்தீவு மாவட்ட அமைச்சர் ஜனுப் மன்சூர் பேசுகையில்; "அமைச்சர் இராசதுரை முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தியின் தந்தை" என்று குறிப்பிட்டார். ம

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

82 Sri கொமர் (Commer) கூரல் வான் விற்பனைக்குண்டு. நல்ல நிலையில் உள்ளது. நேரில் பார்வையிடலாம். 21, புது வீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். 0866

ஆனைக்கோட்டையில், புகையிரதம் பிள்ளையார் கோவில் அருகாமையிலுள்ள ஒழுங்கையில் தென்னை, பனை, மா, புளி முதலிய மரங்களுள்ள 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள மகேந்திரன், பாடசாலை ஒழுங்கை, மானிப்பாய். 0868

திருநெல்வேலி சந்திக்கு அருகாமையில் 2½ பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: "சிறீ வாணி", பலாலி வீதி, திருநெல்வேலி 0837

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் (நாவலர் வீதிக்கு அண்மையில்) சகலவசதிகளும் பொருந்திய வீடு விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் தொடர்பு கொள்ளவும் T கிருஷ்ணமூர்த்தி, 15/10 ஸ்ரீ சிவகாமி கோவில் வீதி, யாழ்ப்பாணம். 0874

வீடு கிணற்றுடன் சேர்ந்த 4 பரப்புக் காணி கலட்டிவேள் தோண்டாவில் மேற்கில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: க. சுந்தரம், தாவடிச் சந்தி. 0876

அதிபர் பதவிக்கான பரீட்சைப் பாடத்திட்ட விடயங்களுடன் 1973, 1978 பரீட்சை வினாக்களையும் உள்ளடக்கி புத்தொளியின் ஆசிரியருக்கு ஆசான் நூல் ரூபா 5/50 வெளிவந்துவிட்டது. விபரங்களுக்கு நவபாதம் செல்வரத்தினம், ஆனைக்கோட்டை. 0879

## தேவை

ஒரு பிரபல புகைப்பட ஸ்தாபனத்துக்கு அவுட்டோர் பட்டப்பிடிப்பு ரீட்சிங் (Retouching) பிறிண்டிங் (Printing) இவற்றுள் ஏதாவதொன்றில் அனுபவமுள்ளவர் தேவை. ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம் விளம்பர இல: 0863, C/o ஈழநாடுலிமிட், யாழ்ப்பாணம். 0863

## வாடகைக்கு

இரு அறைகள், மலசலகூடம், குசினி, குழாய்நீர், மின்சார வசதிகளுடன் கூடிய வீடு உடன் வாடகைக்கு உண்டு. டெலிபோன்: 8161, 63, A V Road, Ariyalai. 0875

## காணவில்லை

எனது 551911403 - X இலக்க அடையாள அட்டையை கண்டெடுத்தோர் கீழ்க்கண்ட விலாசத்துக்கு ஒப்படைக்கவும். வீ பூபாலசிங்கம் வி. ரி ஆர். சிவகுமார் குராவி வீதி, யாழ்ப்பாணம் (தொலைபேசி 8045) 0871

## தவறிவிட்டது

சண்டிலிப்பாயில் முக்கிய தாஸ்தாவேஜுகளையும், மூக்குக்கண்ணாடி மற்றும் சில பொருட்களைக் கொண்ட B பாக் நேற்றுமுன்தினம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்தால் உதவியாக இருக்கும். இ. பாலசுப்பிரமணியம், ஈழநாடு, யாழ்ப்பாணம் 0870

## ஏலவிற்பனை

### மாநகரசபை, யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண மாநகர சபைக்குச் சொந்தமான மூவாயிரத்து எழுநூற்று எழுபத்து ஐந்து [3775] தென்னங்கிடுகுகள் 11-9-81 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணியளவில் யாழ்ப்பாணம் நல்லூர் தற்காலிக சந்தை வளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

இத்திபெறும் கேள்விக்காரர் உடனடியாகப் பணத்தைச் செலுத்தி கிடுகுகளை அப்புறப்படுத்த வேண்டும்.

சி. வி. கே சிவஞானம்,
யாழ். மாநகர ஆணையாளர்,

வேலைப்பகுதி,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
4-9-81 0873

## கூட்டுப் பாதுகாப்பு நடவடிக்கை

(கொழும்பு)

சட்டபூர்வமற்ற மரந்தறித்தலைத் தவிர்க்க இராணுவத்தினரும் பொலிசாருடன் கூட்டுச்சேரவுள்ளனர். இவ்விணைப்புப் பற்றிய உத்தரவுகளை, இராணுவத் தலைமையகம் தனது சகல பிரிவுகளுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

கடந்த வாரம் பொலிசார் பாரிய மரக்கடத்தலொன்றினை "ரூசம்" காட்டினுள் முறியடித்துள்ளதுடன் இதனுடன் சம்பந்தப்பட்டோரையும் கைது செய்துள்ளனர் (உ)

## யாழ்ப்பாண அக்கடமி
### க. பொ. த. உயர்தர பரீட்சை ஏப்பிரல் 1982
## மீட்டல் வகுப்புகள்

வகுப்புகள் 9-9-81ல் ஆரம்பமாகின்றன. சேரவிரும்புவோர் உடன் விண்ணப்பிக்கவும். 1981 பரீட்சைப் பெறுபேறுகளின் பின் மேலதிக வகுப்புகள் ஆரம்பமாகமாட்டா.

அதிபர்
தொலைபேசி எண்: 617
376, பிரதான வீதி,
கண்டிக்குளி, யாழ்ப்பாணம். 0758

## கேள்வி அறிவித்தல்

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திருநெல்வேலி இடவளவில் சிற்றுண்டிச்சாலையை நடாத்துவதற்காக, இலங்கை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பதிவாளரினால் 1981-09-22-ம் திகதி நண்பகல் 12-00 மணி வரை பொறிக்கப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இலங்கை யாழ்ப்பாண பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணமாக 100/- ரூபாவும் மீளளிக்கப்படாத கட்டணமாக 25/- ரூபாவும் செலுத்திப் பெறக்கூடிய குறித்த படிவங்களில் கேள்விகள் அனுப்பப்படுதல் வேண்டும்.

மேலதிக விபரங்களை இக்காரியாலயத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1981-09-03 0842

## வெங்காயத்துடன் மருந்து வில்லைகள்!

(இனித்தேன)

வெங்காயங்களுடன் திருடிய மருந்து வில்லைகளையும் எடுத்துச் சென்றவர் பொலிஸாரிடம் கையோடு மாட்டிக் கொண்டார்.

இச்சம்பவம் நாவலப்பிட்டியிலிருந்து கொழும்பு நோக்கிச் செல்லும் பஸ்வண்டியிலேயே இடம்பெற்றது.

இம் முயற்சி பற்றி விளக்கிய பொலிஸார் மேற்படி மருந்து வில்லைகள் இனித்தேன அரசாங்க வைத்தியசாலை பண்டக அறையிலிருந்து திருடப்பட்டவை என்றும் இவற்றின் பெறுமதி பல ஆயிரம் ரூபா என்றும் தெரிவித்தனர்.

சந்தேக நபர் மேற்படி மருந்து வில்லைகளையும் வெங்காயத்தினையும் ஒரு பையொன்றினுள் வைத்திருந்தாராம். (உ)

## இந்தியா செல்வோர் தொகை அதிகரிப்பு

(மன்னார்)

தலைமன்னாரிலிருந்து கப்பல் மார்க்கமாக இந்தியா செல்வோரின் தொகை அதிகரித்து வருகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை மலைநாட்டைச் சேர்ந்த சுமார் 400 பிரயாணிகள் தலைமன்னாரிலிருந்து கப்பல் மார்க்கமாக இந்தியாவுக்குச் சென்றனர். (உ)

## வான் விபத்து சிலருக்கு காயம்


(கோண்டாவில்)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற வான் ஒன்று புளியங்குளத்தில் தடம்புரண்டதால் வானில் சென்றவர்களில் சிலர் காயம் அடைந்தார்கள். (க)


இச்சு GOODS VAN
ELF 350
ஜப்பானிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்டது விற்பனைக்குண்டு.
பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
0881

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
பாவனையாளர்களுக்கு வழங்கும்
புதிய சேவை
குறைந்த செலவு • நிறைந்த சேவை
எம்மிடம் ஆரம்பமாகியுள்ள வேலைகள்
1. சகலவிதமான நீர் இறைக்கும் இயந்திரங்களும் தேவையான உதிரிப்பாகங்களும் பொருத்தி, திருத்தங்கள் செய்து கொடுக்கப்பெறும்.
2. இரும்புக் கேற்றுகள், கிறில்கள், கதிரைகள், கட்டில்கள் இன்னும் மின்ஒட்டும் வேலைகளும் செய்து கொடுக்கப்பெறும்.
3. சம்மாலை வேலைகள் - சிறப்பாகச் செய்து கொடுக்கவும் முன்வந்துள்ளோம்.
சங்கானை ப. நோ. கூ. சங்கம்,
சங்கானை, 9-9-81
தொலைபேசி: பண்டத்தரிப்பு 95
தந்தி: "வலிக்கோ"
0877.




மீண்டும் வந்துள்ளது
மாணவ நண்பன்
Pilot
BALL POINT
பைலட்
மத்தியதர
போல் பாயின்ட்

சிறப்பான எழுத்திற்கு
உகந்த பைலட்
எங்கும் பெற்றுக்கொள்ளலாம்
ரூ. 1/75
விற்பனையாளர். ஷோ வொலஸ் அன்ட் ஹெஜஸ கொழும்பு 3. டெலிபோன்:- 20671 - 9
SRI COMMUNICATIONS

**மணிவாக்கு**

தகுந்த முயற்சியால் மனிதன் மண்ணுலகில் எதை வேண்டுமானாலும் சாதிக்கலாம்.

— அருள்விருந்து

# நமது நோக்கு

## ஆசிரியர் சம்பளம்

பல நற்செய்திகளை நாமிந்த இருண்ட சூழ்நிலையிலும் பத்திரிகைகளில் தினந்தோறும் படிக்கின்றோம் நம்பக்கூடியளவிற்கு மேலான நற்செய்திகள் அவை. பொதுத்தேர்தல் முன் வீசும் தென்றல் போன்றதெனலாம்.

நாட்டின் வருடாந்த வரவுசெலவுத்திட்டம் பல்லாண்டுகளாக மோசநிலையில் முன்னேறுகிறது. இந்த வருடாந்த 'சத்திர சிகிச்சைக்கு' முன் நோயாளியைத்திருப்திப்படுத்தும் சம்பவங்கள் கடந்த சிலவருடங்களாக நடைமுறையில் இருந்துவருகின்றன

வரவுசெலவுத் திட்டத்தை என்னவகையில் சீர்ப்படுத்துவதென்று நிதி அமைச்சர் அவஸ்தைப்படுவது ஒருபுறம்; பொது நிர்வாக அமைச்சரும், கல்வி அமைச்சரும் அரசாங்க ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் சம்பளம் கூட்டும் ஆலோசனைகளில் ஈடுபட்டிருப்பது மறுபுறம்

பணவீக்கம் எதிர்பாராத அளவில் அதிகரித்துக் கொண்டே போகின்றது; இன்னும் அதிகரிக்கும் என்ற நம்பிக்கையில் அரசாங்க ஊழியர்களுக்கு மாதம் 300 ரூபாய் உயர்வு வழங்குவதாக ஒரு யோசனை.

அது கைகூடினால் நாட்டின் நிர்வாக நடைமுறையில் கணிசமான மாற்றம் காணப்படுமா? அரசாங்க ஊழியர்கள் இன்றைய பொருளாதார அமைப்பில் தாழ்த்தப்பட்ட சமூகமாக மாறிவருகின்றனர் இந்தச் சம்பள ஏற்றம் அவர்களைத் தங்கள் பழைய செல்வாக்குள்ள நிலைக்கு இட்டுச் செல்லுமென்பது சந்தேகம்.

ஆசிரியர் சமூகம் ஒரு பெரும்பட்டாளம்; அரசாங்கத்தின் சேவையிலுள்ள ஒரு கீழ்ப்படிவுள்ள சமூகம். ஒரு மாதத்தில் நாட்டின் நான்கு மூலைகளுக்கும் தந்தி மூலம் இடமாற்றப்பெறும் உரிமையுடையவர்களானால் அரசுக்கு எத்துணை விசுவாசமுடையவர்களாகக் கடமையாற்றும் கூட்டத்தினர் என்பதை யூகித்தறியலாம்.

ஆசிரியரின் சம்பளம் என்றுமே திருப்தியடையாத விடயம் இந்த நாட்டில் மட்டுமல்ல; பழமை பாராட்டும் நாடாகிய பிரிட்டனிலும் ஆசிரியர்கள் தங்கள் சம்பள உயர்வுக்கு பெரிய தொழிற்சங்க சாதனைகள் இயற்றிவெற்றி கண்டிருக்கின்றன.

பல கல்விமான்கள் சமர்ப்பித்தரிய ஆலோசனைகளில் இன்றும் மிகத் திறமானதாகக் கருதப்படுவது பிரபல நூலாசிரியரும் புலவருமான ஒலிவர் கோல்ட் சிமித் அவர்களின் கருத்தே! ஆசிரியர்களின் வகுப்புக்களை இரண்டாகப் பிரியுங்கள்; அவர்களின் சம்பளத்தை இரண்டாகப் பெருக்குங்கள்!

விவேகமான இக்கருத்தை, அதன் புலமையை அரசாங்கங்கள் விளங்கவல்லவையல்ல! சம்பள உயர்ச்சி மட்டுமல்ல; அவ்வுயர்ச்சி, ஆசிரியனின் ஆளுமையை உயர்த்துவதற்கும் நிபந்தனையாய் உள்ளது ஆலோசனையின் மற்றைய பாதி வகுப்புகள் இரண்டாகப் பிரிக்கப்படவேண்டும்! இன்றைய வகுப்புக்கள் ஆசிரியர்களை விழுங்கிவிடக்கூடியவை.

இது உலகில் எந்த நாட்டிலாவது அமுலாகப்படுகின்றதென்பது சந்தேகம்

ஆசிரியர் சம்பளம் நாம திர்ச்சியடையுமளவிற்குச் சில நாடுகளில் மிகப் பெரிதாயிருக்கின்றன

நைஜீரிய நாட்டில் சுமார் ஏழாயிரம் இலங்கை பட்டதாரி ஆசிரியர்கள் கடமையாற்றுகிறார்கள். அவர்களுடைய மாதச் சம்பளம் சுமார் இருபதினாயிரம் ரூபாவாகும். எல்லா வசதிகளுடனும் குடும்ப சீவியத்துக்கு மூவாயிரம் ரூபாய் போதுமானவை; அதைவிட விடுதலைச் செலவுகள், சலுகைகள் அநேகம். ஒரு வருடத்தில் தானும் இவற்றை இங்கு பெறமுடியாது

மூவாயிரம் ரூபா மாதச் செலவில் அவர்களுக்குத் தேவையான சந்தனசக்திக்கு உயிரூட்டும் மதுபான வகை- விஸ்கி, பீர் அடங்கியிருப்பது கவனிக்கவேண்டியது.

ஆசிரிய சேவை அந்நாட்டில் மிக இன்பமான சேவையென்று ஆங்கிலப் பத்திரிகை ஒன்றின் முன்பக்க பேட்டிச் செய்தி புகழ் பாடுகின்றது. இந்த விஸ்கியும் அந்த நல்வாழ்வுக்கு உதவுகிறது

மாணவர்கள் விவேகமானவர்கள்; ஆசிரியர் திறமைசாலிகள்;- சம்பளம் குபேர நாட்டுக் கொடை- இவை உண்மையல்லவிங்குளஞ்சியிருக்கும் ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் கூட அங்கு போக இயலாதவர்கள் போலும் அல்லது எண்ணெய்க்காசில் அருவருப்புள்ளவர்கள் போலும் உத்தியோகம் புருஷ இலட்சணமானால். சம்பளம் உத்தியோகத்தின் இலட்சணத்தை மேம்படுத்துகின்றது. ஆனால் இச்சம்பளம் ஒருவனுடைய மனக்கனிவை விருத்திசெய்யும்' சேவைக்கு உபகாரமாக அமையவேண்டும். வியாபார வரும்படியாகக் காணப்பட்டால் அதன் மதிப்பு மங்கும்.

இரண்டாவது; பொருள் தேடல் என்ற ஒரு நோக்கங்கண்டு தொழில் தேடுதல், அம்மனிதனையும் அவனுடைய சமூகத்தையும் சிறப்பிக்கமாட்டாது எங்கள் நாட்டின் புகழ் பூத்த கலைக்கோவில்கள், பிரபல கல்லூரிகள் தங்கள் திறமையைத் தியாகம் பண்ணி, சொற்பசம்பளத்துடன் தங்கள் சேவையை அர்ப்பணித்த தியாகிகளால் கட்டி எழுப்பப்பட்டன.

இன்று மாறிய பொருளாதார சூழ்நிலையில் இவ்வித தியாக உணர்வு அந்த அளவிற்கு கிட்டாதாயினும், நாமிருக்கும் நாடு நமதென்பதறியாத எங்கள் நாட்டு மாணவர்களை மனிதராக்கும் பணியை வேற்று நாட்டிலிருந்து இங்கு வழங்கப்படும் வேதனத்துக்கு வரவழைப்பது கல்வியில 'சங்கீத கதிரை' யென்னும் பொழுதுபோக்கு நாடகமாகும்.

இந்த அடிப்படையில் அரசாங்கம் நீதியான சம்பள அமைப்பை உருவாக்க முடியுமானால் நாட்டுக்கு சேவை செய்யும் நல்லாசிரியர்கள்- விஸ்கி, பீர் போன்ற வெறிச்சாதனங்களில் தங்கள் மன எழுச்சிக்குத் தங்கியிருக்காமல், தம்முடைய [illegible] யாக், உணர்ச்சியால், தேசிய சேவையில் தொடர்ந்து நற்பணியாற்ற முடியும்.

வெளிநாட்டு கல்வி வியாபாரத்துக்கு எவ்வித ஊக்கமும் விளைவிக்காமல் இங்கு ஒரு சிறந்த ஆசிரியகுலத்தை வளர்க்கவேண்டியது நாட்டின் அவசிய கடமை.

இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக:

# விடுமுறை தினமான 12-ம் திகதி ஹர்த்தால்செய்வதில் அர்த்தமில்லை!

## அ. தி. மு. க. அரசுமீது தி. மு. க. குற்றச்சாட்டு

சென்னை, செப். 8

''இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக இம்மாதம் 12ம் திகதி தமிழகத்தில் அரசு நிலையில் மேற்கொள்ளப்பட இருக்கும் ஹர்த்தாலுக்கான திகதி எதிர்க்கட்சிகளுடன் கலந்தாலோசிக்காமலே முடிவு செய்யப்பட்டுள்ளது.''

இவ்வாறு திராவிட முன்னேற்றக் கழகம் தமிழக அ. தி. மு க.மீது குற்றம் சாட்டியுள்ளது.

இம்மாதம் 12ம் திகதி சனிக்கிழமை அரசாங்க விடுமுறை தினமாகும். எனவே அன்றைய தினம் அரசாங்க ஊழியர்கள் இந்த ஹர்த்தாலில் பங்குபற்றி இலங்கைத் தமிழ் மக்களுக்கு அனுதாபம் தெரிவிக்க முடியாது. எனவே அன்றைய தினம் ஹர்த்தால் செவ்வதில் அர்த்தமில்லை என்றும் தி. மு. கவின் குற்றச்சாட்டில் தெரிவிக்கப்பட்டது.

எனினும் அந்த ஹர்த்தாலுக்கு தி. மு. க. ஆதரவளிக்கும் என்றும் தி. மு க. பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

**அரசு மறுப்பு**

தி மு. கவின் இக்குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் மறுக்கப்பட்டது.

தமிழகத்தின் சகல கட்சிகளுடனும் கலந்தாலோசித்த பின்னரே ஹர்த்தால் திகதி முடிவுசெய்யப்பட்டதுஎன்றும் தி. மு க. பொருளாளர் ஜனுப் சாதிக் பாட்ஷாவுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு சம்மதம் பெற்ற பின்னரே திகதி முடிவு செய்யப்பட்டது என்றும் அரசுதரப்பில் தெரிவிக்கப்பட்டது. [இ]

# பிரிட்டிஷ் மகாராணி இலங்கை விஜயம்

## பாதுகாப்பு நடவடிக்கையில் 6000 பொலிஸ்-இராணுவம்!

[கொழும்பு]

பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத் 11 அவரதுகணவர்எடின்பரோ கோமகன் ஆகியோர் இலங்கை வருவதை யொட்டி தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது

பாதுகாப்பு அலுவல்களின் முக்கியஅம்சமாக, இதற்கென ஆறுயிரம் பொலிசாரும் இராணுவத்தினரும் கூட்டாக ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

மகாராணியாரின் வருகைக்கு முன்னோடியாக அவர்களது பாதுகாப்பினையிட்டு பிரபல பொலீஸ் நிறுவனமான ஸ்கொட்லாந்துயார்ட்' அதிகாரிகள் இலங்கைக்குவந்து சகலஏற்பாடுகளையும் கவனித்ததுடன்அவசியான அறிவுரைகளையும் வழங்கியுள்ளனர்.

பல்வேறு பிரச்சனைகளையும், பயமுறுத்தல்களையும் எதிர்நோக்கியிருக்கும் பிரிட்டிஷ் அரச குடும்பம் அண்மைக்காலங்களில் மிகத்தீவிர பாதுகாப்பிற்குட்பட்டிருப்பது தெரிந்ததே,

ஐரிஷ் கெரில்லாக்களோ ஏனைய பயங்கரவாத இயக்கங்களோ, இலங்கையைத் தமது முயற்சிகளுக்கு களமாக்க முடியாத விதத்திலேயே மேற்படி பாதுகாப்புகள் இயக்குவிக்கப்படவிருக்கின்றன. இதில் ஒரு அம்சமாக ஸ்கொட்லாந்து யார்ட் தனது சந்தேகப் பேர்வழிகள் பற்றிய முழுவிபரங்களையும் இலங்கைப்பாதுகாப்புப்பிரிவுக்குக் கையளித்துள்ளதுடன் வெளிநாட்டவரின் வருகையிலும் கூடிய கவனம் செலுத்துமாறு கோரியுள்ளது.

இலங்கையில் மகாராணி விஜயம் செய்யும் பிரதேசங்கள் விசேட பாதுகாப்புப் படைகளால் காவல் செய்யப்படவிருப்பதுடன் அவர் பயணம் செய்ய விருக்கும் புகையிரத பாதையோரங்களும் கண்காணிப்புக்குள்ளாக விருக்கின்றன

பாதுகாப்பு நடவடிக்கைகளை உதவிப் பொலிஸ் மா அதிபர் திரு ருத்ராரராஜசிங்கம் தலைமையில் உயர் பொலிஸ் அதிகாரிகள் குழுவும் ஜனாதிபதியின் பிரத்தியேக பாகாப்புக் குழுவினரும் மிக அவதானத்துடன் செயற்படுத்துவதில் முனைந்துள்ளனர். [கி]

### ஆசிரிய பென்ஷன்

[மட்டக்களப்பு]

1978 - 1980ம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் ஆசிரியர்களின் பென்ஷன் விஷயத்தில் உரிய முறையில் துரிதமாக வழங்கிய நிருவாகப் மட்டக்களப்பு கல்வித்திணைக்களம் என்பது அண்மையில் எடுக்கப்பட்ட புள்ளி விபரமொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மன்னாரில் பயிற்சி நிலையம்

[மன்னார்]


மன்னார் தாராபுரம் பகுதியில் பனம்பொருள் உற்பத்திப் பயிற்சி நிலையம் ஒன்றை மன்னார் மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்ற அலுவலர் ஜனுப் கபூர் திறந்து வைத்தார்.

ஆரம்பத்தில் இப்பயிற்சி நிலையத்தில் 15 பேருக்குப் பயிற்சியளிக்கப்படும். பயிற்சி பெறுவோருக்கு நாளொன்றுக்கு 8 ரூபா வேதனம் வழங்கப்படும்.

### அழிந்த வீடுகள் புனரமைப்பு

[அனுராதபுரம்]

அனுராதபுரத்தில் கடந்த மாதம 24ம் திகதி வீசிய கடும் காற்றினால் ஹடாகம பகுதியில் அழிவான வீடுகளைத்திருத்தும்படி பிரதமரின் உத்தரவை அடுத்து 10 நாட்களில் வீடுகள திருத்தப்பட்டன.


சக்தி செறிந்த
.:.பைசர்
பிறிமிக்ஸ்'ஏ'
கலவைகள்

- வளர்ப்புக் கோழிகளுக்கு ப்றீடர் பிறிமிக்ஸ் 'ஏ'
- இறைச்சிக் கோழிகளுக்கு ப்ரெயிலர் பிறிமிக்ஸ் 'ஏ'
- முட்டைக் கோழிகளுக்கு லேயர் பிறிமிக்ஸ் 'ஏ'

500 கிராம் பக்கெட் விலை ரூ- 28/- முதல் ரூ. 42/- வரை.

புதிதாகத் தயாரித்த கலவைகள் என்பதால் சத்துக் குறையாமல் உடன் தயாரிப்பின் உத்தரவாதமான பயன் உங்கள் கோழிகளுக்கு கிடைக்கும் கிட்டிய கோழித் தீன் வியாபாரியிடம் கேட்டு வாங்குங்கள்

விசாரணைகள்
Pfizer .:.பைசர் லிமிட்டெட்
688, காலி வீதி, ரத்மலானை.
277, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.

# இலங்கை - சவூதி நல்லுறவு அவசியம்

## மன்னர் காலித்

ஜெடா, செப். 8

'இலங்கைக்கும் சவூதி அரேபியாவுக்குமிடையே நல்லுறவு அவசியம்' என்று மன்னர் காலித் தெரிவித்துள்ளார்.

சவூதி அரேபியாவுக்கு விஜயம் செய்துள்ள இலங்கை ஜனாதிபதிக்கும் மன்னர் காலித்திற்குமிடையில் பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்றது.

இப்பேச்சுவார்த்தைகளின் போது இலங்கை ஜனாதிபதி 'இரு நாடுகளும் அகன்ற கடலால் பிரிக்கப்பட்டுள்ள போதிலும் இரு நாடுகளின் உறவில் நெருங்கிய நல்லுறவு பண்டைக்காலத்தொட்டு நிலவுவதாகவும், இலங்கை அணிசேராக் கொள்கையைக்கடைப்பிடிப்பதாகவும், எந்தவொரு நாட்டின் உள்விவகாரத்தில் இலங்கை தலையிடுவதில்லை என்றும், மத்திய கிழக்கு நெருக்கடி தீர்வுக்கு சவூதி அரேபியா சமர்ப்பித்துள்ள எட்டு அம்சக் கோரிக்கைகளை இலங்கை ஆதரிப்பதாகவும் இஸ்ரேல் தான் ஆக்கிரமித்த இடங்களிலிருந்து வாபஸ்பெற வேண்டுமென்றும் தெரிவித்தார்.

மன்னர் காலித் இப்பேச்சுவார்த்தையின்போது இரு நாடுகளுக்குமிடையில் நல்லுறவு அவசியம் என்று வலியுறுத்திய சர்வதேச விவகாரங்களில் இரு நாடுகளும் ஒரே மாதிரி கொள்கைகளைக் கடைப்பிடிப்பதாகவும் தெரிவித்தார்.

இப்பேச்சுவார்த்தையின் போது இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத், போக்குவரத்து அமைச்சர் ஜனாப் மொகமட், நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனி டி மெல் சவூதி அரேபியா எண்ணெய் வள அமைச்சர் ஷேக் ஜமானி ஆகியோர் கலந்துகொண்டனர். (கு)

## முஸ்லிம் தீவிரவாதிகள் கைது

கெய்ரோ, செப். 8

முஸ்லிம் தீவிரவாதிகள் பலரை எகிப்து அரசாங்கம் கைது செய்துள்ளது.

மத துஷ்பிரயோகம் காரணமாக எகிப்திய மத அமைச்சு 65 பள்ளிவாசல்களை நேரடி கண்காணிப்பில் கொண்டுவந்துள்ளது. (கு)

## ஈரானிய பிரதமர் வேண்டுகோள்

தெஹ்ரான், செப். 8

எதிர்க்கட்சிக் குழுவினர் ஆயுத போராட்டங்களை கைவிடவேண்டும் என்று ஈரானிய புதிய பிரதமர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (கு)

## எண்ணெ கண்டுபிடிப்பு

புதுடில்லி, செப். 8

திரிபுரா, அஸாம், மேற்கு குஜராத் ஆகிய இடங்களில் எண்ணெ கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக லோகசபையில் தெரிவிக்கப்பட்டது. (கு)

# பிரிட்டிஷ் இனக்கலவரம்: இந்தியாவில் எதிரொலி.!

புதுடில்லி, செப். 8

பிரிட்டிஷ் பிரஜைகளான இந்திய மக்களுக்கெதிராக பிரிட்டனில் நடைபெற்ற இன வெறிக் கலவரங்கள், இந்தியாவில் பெரும் பிரதிபலிப்பை தோற்றுவித்துள்ளன.

இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் தூதராலயத்திற்கு முன்பாக பலவேறு அரசியல் கட்சிகளினதும் வெகுஜன இயக்கங்களினதும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுள்ளன. ஆசிய ஆபிரிக்க மக்கள் மீதான தாக்குதல்கள் குறித்தும், பொலிசாரின் நடத்தைகள் குறித்தும் இந்தியாவின் பல்வேறு பத்திரிகைகள் காரசாரமாக விமர்சித்துள்ளன.

"நீண்டகாலத்துக்கு முன்னர் அமெரிக்கப் பிரஜைகள் என்ன உணர்ந்தார்களோ அதையே இன்று பிரிட்டனின் நிறத்தவர்கள் உணர்ந்துள்ளனர்" என்று 'இந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகை எழுதியுள்ளது.

பிரிட்டனின் தேசிய முன்னணியும், இதர இனவாத இயக்கங்களும் பொருளாதார நெருக்கடிகளையும் வேலையில்லாத்திண்டாட்டப் பிரச்னையும் தவறான வழிகளில் பயன்படுத்தியுள்ளன என்றும் இது தொடர்பாக பிரிட்டிஷ் அரசாங்கம் நடவடிக்கைகள் எதையும் எடுக்காதிருப்பது பிரிட்டனின் முழு சமூக அமைப்பையுமே ஆபத்துக்குள்ளாக்கிவிடும் என்றும் இத்தினசரி எச்சரிக்கை செய்துள்ளது.

## ஆயுத உற்பத்தி

மாஸ்கோ, செப். 8

நவீன ஆயுத உற்பத்தியில் அமெரிக்கா சோவியத் யூனியனை மிஞ்சிவிட முடியாது என்று சோவியத் ஜனாதிபதி பிரெஷ்னேவ் தெரிவித்துள்ளார். (கு)

# சமுதாய நன்மைக்காக இளைஞர் பாடுபடுகின்றனர்!

(உடுப்பிட்டி)

சமுதாயத்தில் ஏற்படும் குறைகளைப் பெரிது படுத்தும் எமது சமுதாயம் சமுதாயத்தில் நிகழும் பெருமைகளை மூடி மறைப்பது சமுதாயத்திலுள்ள பலவீனத்தையே எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது".

இவ்வாறு அண்மையில் புதிய குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட கரவெட்டியைச் சேர்ந்த அருட்திரு: கி. ஜெயக்குமார் அடிகளார் கரவைக் கத்தோலிக்க இளைஞர் மன்றத்தினால் தமக்களிக்கப்பட்ட பாராட்டு விழாவிற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இப் பாராட்டு விழா கரவெட்டிப் பங்குக் கட்டளைக் குரவர் அருட்திரு: டொமினிக் அடிகளார் தலைமையில் கரவெட்டி பரலோக மாதா தேவாலயத்தில் நடைபெற்றது.

அருட்: திரு. ஜெயக்குமார் அடிகளார் தொடர்ந்து பேசுகையில்: "எமது திருச்சபையை இரண்டாம் அருள் சின்னப்பா பாப்பரசர் இளைஞர்களால் நிறைவேற்ற முடியாதது என்று ஒன்றுமில்லை" என்று ஆணித்தரமாகக் கூறியுள்ளார். இன்று எமது நாட்டைப் பொறுத்தவரையில் இளைஞர்கள் சமுதாயத்தின் நன்மைக்காகத் தம்மை அர்ப்பணித்து செயலாற்றுவது பாராட்டுக்குரியதாகும்.

இளைஞர்கள் தமது எண்ணங்களை அனுபவம் மிக்கவர்களது ஆலோசனையோடு நிறைவேற்ற முற்பட வேண்டும். அப்பொழுதுதான் தமது இலட்சியத்தை சுலபமாக அடைய முடியும்.

யாழ். மறைமாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. இ. விக்சென்ற் மன்றத் தலைவர் செல்வன் இ தேவராசா ஆகியோரும் பேசினர். (சு)

## 30 மாணவருக்கு படிவம் கிடைத்தது

(அரியாலை)

யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியில் முப்பது மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி கிடைப்பதற்கான இரண்டாவது படிவங்களைப் பெற்றுள்ளனர்.

1980ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் 18 மாணவர்கள் விஞ்ஞானப்பிரிவுக்கும், 11 மாணவர்கள் கணிதப்பிரிவுக்கும் ஒரு மாணவன் வர்த்தகப் பிரிவுக்கும் இரண்டாவது படிவங்களை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 10 ஆயிரம் தென்னங் கன்றுகள்

(மன்னார்)

எருக்கலம்பிட்டியில் தென்னைச் செய்கைக்கு மேலும் ஊக்கமளிக்கும் பொருட்டு 10 ஆயிரம் தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்கப்படவுள்ளது.

இலவசமாக வழங்கப்படவுள்ள தென்னங்கன்றுகள் முடிக்குரிய காணிகளில் தென்னைச் செய்கையை மேற்கொள்வோருக்கும் பலமுறை ஏற்பட்ட சூறாவளி, வெள்ளப் பெருக்கு என்பவற்றில் பாதிக்கப்பட்ட தென்னந்தோட்டச் சொந்தக்காரர்களுக்கும் வழங்கப்படும்.

இதற்கான நடவடிக்கைகளை மன்னார் அரசாங்க அதிபர் திரு. கமிலஸ் பெர்னாண்டோ மேற்கொண்டு வருவதாக எருக்கலம்பிட்டி தென்னை அபிவிருத்திச்சங்கச் செயலாளர் ஜனாப் பி. எம். எம். சாலிஹு தெரிவித்தார். (சு)

## ஸ்தாபகர் நினைவுவிழா

(புத்தூர்)

இலங்கையில் அரசினர், இலவசக் கல்வியை ஆரம்பிப்பதற்குப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரியை அமைத்து, சிறக்கச்செய்து திரு. மயில்வாகனர் சுந்தரையாவின் நினைவுநாள் விழாவும், பரிசளிப்பு வைபவமும் இம்மாதம் 10-ம் திகதி கல்லூரியில் கொண்டாடப்படவிருக்கிறது.

## 18,600 கிறும் கஞ்சா சிக்கியது

### பெண் கைது

(மட்டக்களப்பு)

ஓட்டமாவடியில் இரு வீடுகளில் திடீர் சோதனை நடத்திய பொலிசார் 18 ஆயிரத்து 600 கிறும் கஞ்சாவை கைப்பற்றினர்.


இச்சம்பவம் தொடர்பாக ஒரு பெண் உட்பட இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர். விசாரணையின் பின் இவர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். (சு)


# லக்ஸபான தரும் ஒரு சக்தி - வாய்ந்த உத்தரவாதம் பாதுகாப்பளிக்கும் மூடி

இப்பொழுது உங்கள் லக்ஸபான டிரான்ஸிஸ்டர் பற்றறி மேலுள்ள பிளாஸ்டிக் பாதுகாப்பளிக்கும் மூடி நிறைந்த சக்தியை உறுதிப்படுத்துவதுடன் செவிக்கு இன்பமளிக்கும் நேரத்தையும் அதிகரிக்கும்.

பிளாஸ்டிக் பாதுகாப்பளிக்கும் மூடியை அறிமுகப் படுத்துவதன் மூலம், சிறந்ததையே வழங்க வேண்டுமென்பதற்கு இன்னொரு அடியை முன்னேக்கி வைக்கிரும். இதுவே நிறைந்த சக்திக்கு உறுதி வழங்குகிறது.

உறுதிபடுத்தப்பட்ட மனநிறைவிற்கு பிளாஸ்டிக் பாதுகாப்பளிக்கும் மூடியுள்ள சக்தி வாய்ந்த லக்ஸபான டிரான்ஸிஸ்டர் பற்றறியைக் கேட்டு வாங்குங்கள்.




வாங்குக - சக்திநிறைந்த லக்ஸபான

De Alwis C 81/495

# புதியபாராளுமன்றகட்டடம் பெப்ரவரி19-ல்திறக்கப்படும்

(கொழும்பு)

இலங்கை ஜனநாயகக் குடியரசின் புதிய பாராளுமன்றக் கட்டிடம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 19ம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.

இத்தகவலை ராஜாங்க மந்திரி ஆனந்ததிஸ்ஸ டி அல்விஸ் வெளியிட்டார்.

இதுபற்றி மேலும் தெரிவித்த அமைச்சர் புதிய பாராளுமன்ற ஆரம்பத்தினூடு இலங்கை மீண்டும் கோட்டே ராஜ்யத்திலுக்குட்படுவதுடன் புதிய சகாப்தத்தினையும் அரசியலில் ஏற்படுத்துமெனக் கூறினார். (உ)

## விபத்தில் ஒருவர் பலி

(மட்டக்களப்பு)

உழவு இயந்திரத்துடன் மோதிய மோட்டார் சைக்கிள் விபத்துடன் இடம்பெற்றதால் ஏறாவூரைச் சேர்ந்த க. புண்ணியமூர்த்தி என்ற இளைஞர் மரணமானார்.


மரண விசாரணை அதிகாரி திரு. க. சிவநாதன், விசாரணையின் பின் விபத்து மரணம் எனத் தீர்ப்பளித்தார். (உ)

# இந்து பழைய மாணவர் கிஷோர்மீண்டும் சாம்பியன்

(யாழ்ப்பாணம்)

தமிழ்நாடு மாநில அசெசூரி குத்துச்சண்டை போட்டியில் மட்ராஸ் கிறிஸ்தவக் கல்லூரி மாணவன் குணரத்தினம் கிஷோர்குமார், வெல்டர் வெயிட் பிரிவில் குத்துச்சண்டை வீரனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இப்போட்டியில் இவர் இறுதியாக திரு. சுந்தரராசனை எதிர்த்து மோதி மிகக்கூடிய புள்ளிகளைப் பெற்று வெற்றிவாகை சூடினார். இவர் இப்போட்டியில் தொடர்ந்து மூன்று வருடங்களாக சாம்பியனாக இருந்து வருவதும் சென்ற வருடம் சுகததாச விளையாட்டரங்கில் இந்தியா, இலங்கை பாகிஸ்தான் முதலிய நாடுகளுக்கிடையில் நடைபெற்ற கராட்டிப் போட்டியில் இரண்டாவது இடத்திற்கான வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கது. இவர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பழைய மாணவராகும். இவர் இக்கல்லூரியின் உதைபந்தாட்ட, கூடைப்பந்தாட்ட மெய்வல்லுநர் குழுக்களில் அங்கத்துவம் வகித்துள்ளார்.



இவர் விக்டோரியாக் கல்லூரி ஆசிரியரும், சாரண உதவி மாவட்ட ஆணையாளரும், யாழ். மாவட்ட கிரிக்கெட், உதைபந்தாட்ட, கரப்பந்தாட்ட, மெய்வல்லுநர் நடுவர் குழுக்களில் அங்கத்தவருமான திரு வீ. குணரத்தினத்தின் புதல்வராகும். இவரது தாயார் திருமதி ஜே. குணரத்தினமும் விக்டோரியா கல்லூரி ஆசிரியராகவும் மாணவிகளுக்கான சாரணர் தலைவியாகவும், சாரணியர் வழிகாட்டிகளின் தலைவியாகவும் கடமையாற்றுகிறார்.

## அருமை ஆசான் தருமலிங்கம்

அன்பும் அறிவாற்றலும் பண்பும் பணிவும் கொண்ட ஆசிரியர் தருமலிங்கத்தின் திடீர் மறைவு எமது கிராமத்தை மட்டுமன்றி ஆசிரிய சமூகத்தையும் கூட அதிர்ச்சிக்குள்ளாக்கியிருப்பதில் வியப்பொன்றுமில்லை. நல்லதொரு ஆசானாகவும் சிறந்த சமூக சேவையாளனாகவும் இனிய இல்லறத் தலைவனாகவும் திகழ்ந்த இவர் இந்த இளம் வயதில் எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து விட்டார் என்பதை நினைக்கவே நெஞ்சம் கனக்கிறது.

கவர்ச்சியான தோற்றமும் கண்ணியமான நடை உடையும் எவரையும் மதித்து நடக்கின்ற அருமையான பண்பும், எதையும் ஒளிவு மறைவின்றி பேசுகின்ற களங்கமற்ற நெஞ்சம் தருமலிங்கம் ஒருவரிடமே அமைந்திருந்த ஒரே காரணத்தினால் தான் இவரை இழந்து இன்றுடன் முப்பத்தொரு நாட்களாகியும் அவரை மறக்க முடியாத நிலையில் எமது இதயம் விம்மிக்கொண்டிருக்கிறது.

நண்பர் தருமலிங்கம் இளம் வயது முதலே சிறந்த மாணவனாகவும், விளையாட்டு வீரனாகவும் திகழ்ந்து வந்தவர். குப்பிழான் விக்னேஸ்வர வித்தியாலயத்தில் (இப்பொழுது மகா வித்தியாலயம்) தன் ஆரம்பக் கல்வியை முடித்துக்கொண்டு சுன்னாகம் ஸ்கந்தாவில் உயர் கல்வியைத் தொடர்ந்த இவர் பின் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பட்டதாரி மாணவனாகப் படித்துக்கொண்டிருக்கும் பொழுது 'ஆஸ்மா' நோயினால் அவஸ்தைப்பட்டு பட்டப் படிப்பை முடித்துக்கொள்ளாமலே தாயகம் திரும்பினார். அந்த நேரத்தில் அவரின் உடல்நிலை பாதிக்கப்படாமல் இருந்திருந்தால், தன்னிகரற்ற ஒரு கல்விமானை இந்த நாட்டுக்களித்த பெருமையை எமது கிராமம் பெற்றிருக்கும்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போம்.

க. பொ. நடனசிகாமணி,
குப்பிழான் விக்னேஸ்வரா,
ம. வி. அ. ச. செயலாளர்.

## பஸ்ஸில் கஞ்சா சிக்கியது 2 பிரயாணிகள் கைது

(மன்னார்)

பஸ்ஸில் கஞ்சா கடத்திக் கொண்டு வந்த இரண்டு பேரை முருங்கன் பொலிசார் கைது செய்ததுடன் கடத்திக் கொண்டுவரப்பட்ட கஞ்சாவையும் கைப்பற்றினர்.

மதவாச்சியிலிருந்து மன்னாரை நோக்கி வந்த பஸ் வண்டியை மாவிலியில் வைத்து முருங்கன் பொலிசார் சோதனையிட்ட போது பெருந்தொகையான கஞ்சா கைப்பற்றப்பட்டது.

இக்கடத்தல் சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். (உ)

## லொறிவிபத்து சிறுவன் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஏறாவூர் பிரதான வீதியில் நடந்த லொறி விபத்தில் ஏறாவூர் 4ம் குறிச்சியைச் சேர்ந்த ரவீந்திரக்குமார் என்ற 12 வயது சிறுவன் பலியானார்.

மரணவிசாரணை அதிகாரி திரு க. சிவநாதன் விபத்து மரணம் எனத் தீர்ப்பளித்தார். (உ)

## பாதயாத்திரை

(சாவகச்சேரி)

தென்மராட்சி சைவமகா சபையும் திவ்வியஜீவன சங்கமும் இணைந்து இன்று செல்வச்சந்நிதிக்குப் பாதயாத்திரைப் பஜனை மேற்கொள்ளுகிறார்கள்.

## உரும்பராயில் உரையரங்கு

(உரும்பராய்)

உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கோவில் மகோற்சவத்தை முன்னிட்டு மேற்படி ஆலயத்தில் நாளை வியாழன் மாலை நடைபெறவுள்ள விசேட உரை அரங்கில் "கருணையும் பொறுமையும்" என்ற தலைப்பில் வித்துவான் க. சொக்கலிங்கம் (சொக்கன்) உரையாற்றுவார்.

யாழ் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அ. சண்முகதாஸ் உரையரங்குக்குத் தலைமை வகிப்பார்.


கடைசி வாரம்
ஹரன் (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு-சுஜாதா
தூல் வேலி
(கலர்)

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - ஸ்ரீதேவி
பட்டாக்கத்தி பைரவன்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சி
சிவகுமார் - லட்சுமி
அவன்- அவள் அது (ஈஸ்ட்மன்கலர்)

வல்லவன் ஒருவன்

தினசரி 4 காட்சிகள்
அலாவுதீனும் அற்புதவிளக்கும்

10 9-81 வரை மட்டும்
சாந்தி (யாழ்.நகர்) 10-30, 2-30, 6-00 & 9-45
சிவாஜி - எஸ் எஸ். ஆர். - தங்கவேலு
பத்மினி-எம். என். ராஜம்.
'தெய்வப் பிறவி'
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி

கடைசி வாரம்
(யாழ்ப்பாணம்)
ராஜா தினசரி 10-30, 2-15, 6-00, 9-30
★ எம். ஜி. ஆர். ★ லதா
பல்லாண்டு வாழ்க
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
★ காமினி ★ஸ்ரீபிரியா ★ராதாசலூஜா ★தேங்காய்
நீலக்கடலின் ஓரத்திலே
(ஈஸ்ட்மன் கலர்)

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
★ சுதாகர் ★ பாக்கியராஜ் ★ சுமதி
மற்றும் பலர் நடித்த
அவர் இல்லாத சித்திரங்கள்

3-வது வாரம்
ஸ்ரீதர் (யாழ் நகர்) தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
மஞ்சுபார்கவி — சோமயாஜுலு
சங்கராபரணம் (கலர்)

REGAL — "ஹவுஸ்புல்" காட்சிகளாக
DAILY 5 SHOWS
— புரூஸ்லியின் சாகசம்.
FIST OF FURY
—"புரூஸ்லி கொலைகாரன் ஆகியதன் மர்மம் என்ன,??
அவனால் கொலை செய்யப்பட்டவர் அநேகம்..

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30,
6-30, 9 30
ஜெமினி - முத்துராமன் - எம். ஆர். ராதா
கே. ஆர். விஜயா - சாவித்திரி - மனோரமா
நடித்த
கற்பகம்
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி

இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக

# கருணாநிதி தலைமையில் போராட்டம்!

## திட்டமிட்டபடி 15-ல் நடக்கும்

சென்னை, செப். 8

இலங்கைத் தமிழ மக்களுக்கு எதிராக இடம்பெற்ற வன் செயல்களுக்கு ஆதரவாக அண்ணா பிறந்ததினமான இம் மாதம் 15ம் திகதி எனது தலைமையிலேயே சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத் தின் முன்னிலையில் தி மு. க, வின் மறியல் போராட்டம் நடைபெறும் இதில் எதுவித மாற்றமும் இல்லை.

இவ்வாறு தி. மு. க தலைவர் திரு, மு. கருணாநிதி இன்று சென்னையில் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ்மக்களுக்கு தமிழக மக்களின் உணர்வு பூர்வமான ஆதரவைத் தெரி வக்கவும் தி மு. க.மீது பழி வாங்கல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அ தி மு க அரசின் நடவடிக்கைகளைக் கண்டிக்கவுமே இந்த மறியல் போராட்டம் நடைபெறு கிறது என்றும் திரு. கருணா நிதி தெரிவித்தார்.

பேரறிஞர் அண்ணாவின் பெயரால் இயங்கிவரும் கட்சி யின் கொடுமைகளைக் கண் டித்து அண்ணா பிறந்தநாளில் போராட்டம் நடாத்துவதே பொருத்தமான செயலாகும் என்றும் திரு கருணாநிதி கூறி னார். [இ]

### 42 தி. மு.க.வினர் இன்று கைது!

சென்னை, செப். 8

இலங்கைத் தமிழ்மக்களுக்கு ஆதரவாக சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் முன்னிலையில் தொடர்ச்சியாக ஊர்வலம் நடத்திவரும் தி மு. கவின் இன்றைய ஊர்வலத் தின்போது 42 பேர் கைதுசெய் யப்பட்டுள்ளனர்.

தி மு க சட்ட சபை உறுப் பினர் திரு பி பொன்னுரங் கம் தலைமையில் சென்ற ஊர் வலத்தினரே கைதுசெய்யப் பட்டனர். திரு பொன்னுரங் கம் உட்பட 42பேரும் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். [இ]

மாதிரிக் கிராமத்தில்

# கோஷ்டிச் சண்டை வீடுகள் தீக்கிரை

[நமது நிருபர் தமிழினியவன்]

காத்தான்குடிக்கும் ஆராயம் பதிக்குமிடையில் உள்ள 'கர்ப்பலா' மாதிரிக்கிராமத் தில் இரு கோஷ்டியினருக்கு இடையே ஏற்பட்ட கைகலப் பைத்தொடர்ந்து மாதிரிக் கிராம எல்லையில் பல வீடுகள் தீக்கிரையாகின!

கர்ப்பலா மாதிரிக்கிராமப் பகுதியில் குறிப்பிட்ட ஒரு கோஷ்டியினர், தாம் குடியிருப பதற்காக, முடிக்குரியகாணி களைத் துப்புரவாக்கிக்கொண் டிருந்தபோது, மற்றக்கோஷ்டி யினர் இங்கு வந்தனராம். அதைத்தொடர்ந்து முதலில் கைகலப்பு மூண்டதாகச் சொல்லப்படுகிறது.

குறிப்பிட்டகோஷ்டியினரை அக்காணியில் குடியமர்த்த உடந்தையாகவிருந்ததாக ஒரு ஆசிரியர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்

இச் சம்பவத்தைத் தொடர்ந்தே குறிப்பிட்ட கிராமத் தின் எல்லையிலுள்ள வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதாம்.

ஆசிரியர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். ஏனைய இருவரும் இம்மாதம் 19ந் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நிலைமை இவ்வாறிருக்க, கிராமத்தின் மற்றுமொரு எல்லைப்பகுதியில் வீடுகளுக்கு தீவைக்கமுயற்சித்த இருவர் இராணுவத்தினரால் கையும் மெய்யுமாகப் பிடிபட்டு பின் னர் பொலிஸாரிடம் ஒப் படைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து வாள், கத்தி, மண்எண்ணைப் போத் தல், தீப்பெட்டி ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன.

மாதிரிக்கிராமத்திலும், எல் லைப் பகுதியிலும் இராணுவத்தினரும் பொலிஸாரும் பாதுகாப்பு நட வடிக்கைகளை மேற்கொண்டுள் ளனர் சந்தேகத் துக்கு இடமான முறையில் நடமாடிய பத்து இளைஞர் கைது செய்யப்பட்டு விசார ணைக்குட்படுத்தப் பட்டுள் ளனர்.

# பட்டப்பகலில் ஒருவர் கத்திக்குத்துக்குப் பலி!

## மிருசுவில்ரயில்நிலையம்முன்சம்பவம்

(பச்சிலைப்பள்ளி)

லொறி உரிமையாளர் ஒரு வர், தனது லொறியைச் செலுத்திச்செல்லும்போது, மிருசுவில் புகையிரதநிலையத் திற்கு முன்பாக வைத்துக் கத்திக்குத்துக்குப் பலியானார்.

இவ்வாறு பலியானவர் யாழ்ப்பாணம் ஈச்சமட் டடையைச் சேர்ந்த சுவாமி நாதர் பத்மநாதன் என்பவ ராவார்.

திங்கட்கிழமை பகல் பதி னொரு மணியளவில் கத்திக் குத்துக்குள்ளான இவர், வீதி யால் வந்த இராணுவ வீரர் களால் சாவகச்சேரி அரசினர் மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டு அங்கு மரணமானார். இறந்தவரின் தலை, மார்பு, வயிறு ஆகிய இடங்களில் காயங்கள் பல காணப்பட் டன.

சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு க. வி. விக்கி னேஸ்வரன் சாவகச்சேரி அர சினர் மருத்துவமனை பிரேத அறையில் சடலத்தைப் பார்வையிட்டார். மரண விசாரணையில் இறந்தவரின் மனைவி திருமதி ப. ஞானம்மா, சு. மயில்வாகனம் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

நீதிபதி இதுசம்பந்தமான புலன்விசாரணையை சாவகச் சேரிப் பொலிசாரை நடத்து மாறும் பிரேதபரிசோதனையை சாவகச்சேரி மாவட்ட வைத் திய அதிகாரியை நடத்தும்படி யும் உத்தரவிட்டார்.

### கத்தி முனையில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ் மாநகராட்சிமன்றம் அளித்த வரவேற்பில்கலந்து கொண்டு பேசுகையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் மேற் கண்டவாறுகுறிப்பிட்டார்

யாழ் மாநகர முதல்வர் திரு இராஜா விஸ்வநாதன் தலைமை யில் இவ்வரவேற்புக்கூட்டம் நடைபெற்றது

''மிகவும் சிக்கலான சூழ் நிலையிலேயே அரசாங்கத் துடன் நாம் பேச்சு நடத்தி னோம் சிலர் எமது பேச்சுக்கள் தமிழ்மக்களுக்குச் சாதக மானதா பாதகமானதா என பொறுப்பற்ற முறையில் விமர் சிக்கத்தொடங்கியுள்ளனர் இது வருத்தத்துக்குரியதாகும். என்றும் திரு அமிர்தலிங்கம் தெரிவித்தார்

தெய்வத்தின் துணையுடன் புதுநம்பிக்கையோடு இடம் பெற்ற இப்பேச்சுவார்த்தை நல்லமுறையில் முடிவுற்றது குறித்தும் திரு. அமிர்தலிங் கம் மகிழ்ச்சி தெரிவித்தார்.

— பெரும் குற்றவாளிகளுக்கு —

# சாரதி லைசென்ஸ் கிடைக்க சட்டத்தை திருத்துக

## அமைச்சரிடம் கோரிக்கை

[கொழும்பு]

பெரும் குற்றவாளிகளுக்கு மோட்டார் வாகன சாரதி லைசென்ஸ் வழங்கும் வகையில் தற்போது அமுலில் உள்ள மோட்டார் போக்குவரத்து சட்டத்தில் திருத்தம் செய்து அக்குற்றவாளிகளுக்கு புனர் வாழ்வளிக்க வேண்டும்

இவ்வாறு மகாசங்க பொ முனை செயலாளர் சங்கைக் குரிய மீத்தியாகொட குண ரத்னதேரோ போக்குவரத்து அமைச்சரைக் கேட்டுள்ளார்.

போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது வுக்கு தேரோ எழுதியுள்ள கடிதத்திலேயே மேற்கண்ட வாறு கோரியுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளதாவது:

தற்போது அமுலிலுள்ள மோட்டார் போக்குவரத்து சட்டத்தின் 269 (சி) பிரிவின் படி பெரும் குற்றவாளி (ஐ. ஆர் சி) களுக்கு மோட்டார் வாகன சாரதி லைசென்ஸ் வழங்கப்படுவதில்லை. இத ஞல் அக்குற்றவாளிகள் சாரதி களாகவோ அன்றி மெக்கா னிக்குகளாகவோ தமது வாழ் வைப் புனரமைக்க வாய்ப்பில் லாமல் போகிறது. வர்த்தக ராகவோ விவசாயிகளாகவோ தமது வாழ்க்கையை அமைத்து தமது சொந்தவாகனங்களைச் செலுத்த முடியாத நிலையிலும் இவர்கள் இருக்கிருர்கள்.

மோட்டார் போக்குவரத்து சட்டத்தின் மேற்படி பிரிவு அமுலிலிருப்பதால் இந்த துர திர்ஷ்டசாலிகள் இந்நாட்டில் நல்ல பிரஜைகளாக மாறு வதற்கு வாய்ப்பில்லாது போகி றது எனவே மோட்டார் போக்குவரத்து சட்டத்துக் குப் பொறுப்பாக இருக்கும் தாங்கள் அச்சட்டத்தை மேற் கூறியவாறு திருத்தி அமைக்க முன்வரவேண்டும். [இ]

### நள்ளிரவில்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

காரி பொன். சுகுணேந்திரன், உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக் டர் சிவராசா ஆகியோர், கிளிநொச்சியில் வைத்து சந் தேகத்தின்பேரில் ஒருவரைக் கைது செய்துள்ளதுடன் களவு போன பொருள்களின் ஒரு பகுதியையும் மீட்டுள்ளனர். இக்களவு குறித்து மேலும் இருவர் தேடப்பட்டுவருகின்ற னர்.

கந்தரோடைப் பகுதியில் உள்ள வீடொன்று இரவு நேரத்தில் உடைக்கப்பட்டு சுமார் 20 ஆயிரம்ரூபா பெறு மதியான பொருள்கள் கொள்ளை யடிக்கப்பட்டுள்ளன.

எஸ். இராஜேந்திரம் என்ப வருக்கு சொந்தமான வீட்டி லேயே நகைகள் வெள்ளிச் சாமான்கள் உடுபிடவைகள் கொள்ளையடிக் கப்பட்டுள்ளன சுன்னகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. பொன். சுகுணேந்திரன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார். [மா]

### நஷ்டஈடு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கூடியது.

திரு எஸ் டி பண்டார நாயக்கா தொடர்ந்து பேசுகை யில், 77ல் இடம்பெற்ற கல வரங்களினுல் பாதிக்கப்பட்ட வர்களுக்கு அரசு நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கா தது கவலைக்குரியது என்ருர்.

இதற்குப் பிரதமர் திரு. ஆர் பிரேமதாசா பதிலளிக் கையில் நஷ்டஈடு வழங்குவது குறித்து அரசு ஆராய்ந்துவருகி றது என்றும், சிலர்காப்புறுதித் திட்டத்தின் கீழ் நஷ்டஈடு பெறும் எண்ணத்துடன் தங் களது சட்டடங்களையே சேதப் படுத்தியுள்ளனர் என்றும் இவைபற்றி எல்லாம் ஆராய் ந்தே நஷ்டஈடுவழங்க நட வடிக்கை எடுக்கப்படும் என் றும் கூறி—

'1970ம் ஆண்டுத்தேர்தலைத் தொடர்ந்து நடைபெற்ற கல வரங்களுக்கு என்ன நஷ்ட ஈடு கொடுத்தீர்கள்?'' என்று திரு எஸ் டி பண்டாரநாயக்கா வைத் திருப்பிக்கேட்டார். [ம]

### யாழ். மெயில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கிழமை இரவு காங்கேசன் துறையிலிருந்து கொழும்பு சென்ற தபால் ரயில் வவனி யாவிலிருந்து புறப்பட்ட சிறிது நேரத்தில எஞ்ஜினை அடுத்து மூன்ருவது பெட்டி இணைப் பில் தீ ஏற்பட்டதாகவும் இத னைக்கண்ட பிரயாணிகள் தமது பொதிகளை எடுத்துக் கொண்டு பீதியுடன் ஏனைய பெட்டிகளை நோக்கிச் சென்ற தாகவும் அடுத்த ரயில் நிறுத் தப்பட்டு தீ அணைக்கப்பட்ட தாகவும் ரயில்வேப் பகுதி தெரி வித்துள்ளது. [ம-இ]


ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
ஆரம்பித்திருக்கும்

**உல்லாச பஸ் சேவை**

யாழ்ப்பாணம் - கொழும்பு - யாழ்ப்பாணம்
கண்ணியமான, பாதுகாப்பான பஸ்சேவை

**யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படுதல்:**
செவ்வாய், வியாழன், ஞாயிற்றுக்கிழமைகளில்

**கொழும்பிலிருந்து புறப்படுதல்:**
திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில்

யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:

(1) ஹோம் பினன்ஸ் லிமிட்.
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: இல: 8310

(2) யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: இல: 7596.

கொழும்பில் டிக்கட் பெறும் இடங்கள்

ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
463, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190.

ரவிந்திரா ஸ்டோர்ஸ்
285, காலி வீதி, வெள்ளவத்தை.

J. M. S. மிராண்டாஸ்
109, ஒல்கொட் மாவத்தை, புறக்கோட்டை.

**டிக்கட் விலை: ரூபா 65-00**



**அரிய சந்தர்ப்பம்**

ரேடியோ-டெலிவிஷன், ஏயர் கொண்டிசனிங், வெல்டிங்-மூன்றுமாத டிப்ளோமா பயிற்சி வகுப்புக்கள், ஆரம்பம் 10-9-81.
அனைவரும் சேரலாம்; நேரில் வரவும்.

நாஷனல் அக்கடமி
மொம்சாக் கட்டிடம்
11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
0885


இப்பத்திரிகையாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 808ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஞு மீ செப்டம்பர் 9-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office: Sri Lanka. Regd. Q. B. 100236/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி: 7707, 889, 8126.